1979 ஏப்ரல் 27]

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, மருதை ஆற்றின் குறுக்கே பாலம் கட்டும் குறிப்பு ஏற்கனவே இருக்கிறது. அங்கே ஒரு தாம்போதி இருப்பதால், ஒரு மேம் பாலம் உயர்மட்டப் பாலமாகக் கட்டினால்தான் அவர்கள் எண்ணம் நிறைவேறும். அதற்கு 47 லட்சம் செலவாகும் என்று கணக்கிடப்பட்டிருக்கிறது. வரும் ஆண்டில் நிதிநிலைமையை அனுசரித்து, அரசு பரிசீலனையை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. என். பெருமாள் : பேரவைத் தலைவர் அவர்களே, அந்த முயற்சி மீண்டும் எப்போது எடுத்துக்கொள்ளப்படும்? ஜனங்களுக்கு வசதி எப்போது ஏற்படும்? எனவே, அதைக் கட்டித் தர வேண்டும் என்று அமைச்சர் அவர்களை தாழ்மையாகக் கேட்டுக்கொள்கிறேன்.

(பதில் இல்லை).

சித்தமல்லி ஏரித் திட்டம்.

*வினா எண். 860—திரு. வெ. கருணாமூர்த்தி : மாண்புமிகு வேளாண்மை-பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா :—

(அ) திருச்சி மாவட்டம், உடையார்பாளையம் வட்டம் சித்தமல்லி கிராமத்தில் பாசன வசதிக்காக 'சித்தமல்லி ஏரித் திட்டம்' அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அத்திட்டத்தின் தற்போதைய நிலை என்ன ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) மற்றும் (ஆ) இத்திட்டம் பற்றி, தலைமைப் பொறியாளர் அரசுக்கு அறிக்கை அனுப்பியுள்ளார். இவ் வறிக்கை அரசின் ஆய்வில் உள்ளது.

திரு. வெ. கருணாமூர்த்தி : தலைவர் அவர்களே, எவ்வளவு ரூபாய் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது ? எவ்வளவு ஏக்கர் நிலங் கள் அதனால் பயனடையும் என்பதைத் தெரிவிக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, 2 கோடியே 31 இலட்சம் ரூபாய்க்கு மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. அதனால், 4,202 ஏக்கர் புஞ்சை நிலங்களும், 829 ஏக்கர் நஞ்சை நிலங்களும் பாசன வசதி பெறும்.

திரு. வெ. கருணாமூர்த்தி : தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தை எந்த ஆண்டு அரசு துவங்குவதற்கு முயற்சி எடுக்கும் என்பதை அறிய விரும்புகிறேன் ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கனவே சொன்னேன். இந்தத் திட்டம் பரிசீலனையில் இருக்கின்றது. எவ்வளவு சீக்கிரம் முடியுமோ, அவ்வளவு சீக்கிரம் எடுத்துக் கொள்ளப்படும்.

கொட்டக்குடி ஆற்றின் குறுக்கே அணை.

*வினா எண். 861—திரு. பி. ராமதாஸ் : மாண்புமிகு வேளாண்மை-பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா :—

(அ) போடியில் உள்ள கொட்டக்குடி ஆற்றின் நடுவே அணைக்கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது செயல்படுத்தப்படும் ?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) போடியில் உள்ள கொட்டக்குடி ஆற்றின் குறுக்கே அணைக்கட்டும் திட்டம் தற்போது ஆய்வில் இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. ஒ. சுப்பிரமணியன் : போடிக்கு அருகே உள்ள கொட்டக்குடி ஆற்றிலிருந்து போடி நகருக்குக் குடிநீர் எடுக்கப் படுகிறது. அந்த அணைக்கட்டுத் திட்டம் உருவானால் குடிநீர்த் திட்டம் பாதிக்கப்படாதா?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : இத் திட்டம் ஆய்வில் இல்லையென்றுதான் நான் பதில் சொன்னேன்.

திரு. வே. இரா. ஜெயராமன் : கொட்டக்குடி திட்டத்திற் குப் பதிலாக கொம்புத் தேக்கு திட்டம் அரசின் பரிசீலனையில் இருக்கிறதா ? இந்தத் திட்டமாவது ஆய்வுக்கு எடுத்துக்கொள் ளப்பட்டு.......